கக்கனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திருமதி.A. சகாயமரி,

ந.க.எண்: /2024 **நாள்:** 02.2024

பொருள்: மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், கக்கனூர் ஊராட்சி மற்றும கிராமம், சர்வே எண்: **235/11** ஆகியவற்றில் **1.06 ஏக்கர் (அ) 4300.00 ச.மீ** பரப்பளவு கொண்ட மனைப்பிரிவிக்காண இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள் 23.09.2020
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின். ந.க.எண் : **MSXJVX57/2024/TCP** நாள்: 08.02.2024
3. கக்கனூர் ஊராட்சி **தீர்மானம் எண்: 34** நாள் : **22.04.2024.**
4. தானபத்திரம் எண் **468/2024** நாள்: 06.03.2024
5. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா – விழுப்புரம் கருவூலம் இணைய தளத்தின் வாயிலாக செலுத்தபட்ட நாள் : 12.04.2024 (ம) இந்தியன் பாங்க் கக்கனூர் கிளையில் செலுத்தபட்ட நாள் : 02.04.2024

உத்தரவு :

காணை ஊராட்சி ஒன்றியம், கக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண் : **235/11 -** ஆகியவற்றில் **1.06 ஏக்கர் (4300.00 ச.மீ)** பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்தி பார்வை (1)– ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறி முறைகளின் படியும் பார்வை(2)–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை (3) ம (4) ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தானபத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (5) ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரச தலைப்பில் செலுத்தி அதற்குண்டான

A. Sagayamary
தலைவர்
ஊராட்சி மன்றம்
கக்கனூர் ஊராட்சி,
காணை ஒன்றியம்.

கட்டணம் ரூ. 12500.00 /- மற்றும் கூராய்வு ரூ. 22000/- (22*1000) இந்தியன் பாங்க் – கக்கனூர் கிளை வாயிலாக செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு – 021760800AS22709

வ எண்	விஸ்தீரணம்	சார்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு ரூ (ச.மீ)	3 % நிலமாற்று கட்டணம் ரூபாய்
1	1.06 ஏக்கர் (அ) 4300.00 ச.மீ சர்வே எண்: 235/11	93.90	12500/-

(ரூபாய் பண்னிரன்டாயிரத்து ஐநூறு மட்டும்)

நிபந்தனைகள்:

1. நில உரிமம் குறித்து வழங்கபபட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின். மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட உப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீநிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுதி ரத்து செய்யப்படும்.
3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பலிசீலித்து முடிவி எடுக்க வேண்டும்.

A. Sagayamary.

தலைவர்
ஊராட்சி மன்றம்
கக்கனூர் ஊராட்சி,
காணை ஒன்றியம்.

4. மேற்படி புதியமனைப்பிரிவில் தார் சாலை, பூங்கா, உள்ளாட்சி –A (ம). மின்சார துறை–B ஆகியன தானமாக அன்னியூர் சார்பதிவாளர் ஆவண எண் : 468/2024 நாள்: 06.03.2024 – ன் படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி புதியமனைப்பிரிவில் தார் சாலை, தெருக்களின் பெயர் பலகைகள், மனையின் உயர்மின்னழுத்த கம்பிகள் செல்லுமாயின் அதனை மேற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, கக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள் : 235/11 ஆகியவற்றில் 1.06 ஏக்கர் (அ) 4300.00 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள 22 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்பிதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
கக்கனூர் ஊராட்சி

பெறுநர்

வி. விஜயா,
எண்:13 பாதியார் நகர்,
இந்திரா நகர் விரிவு கோரிமேடு,
பாண்டி – 605 006.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) காணை ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்கனுப்பப்படுகிறது.

நகல் : சார்பதிவாளர் அன்னியூர்

நகல் : வட்டாட்சியர், விக்கிலவாண்டி

A. Sagayamary
தலைவர்
ஊராட்சி மன்றம்
கக்கனூர் ஊராட்சி,
காணை ஒன்றியம்.